# புலிகளின் நேருக்குநேர் மோதலால் ராணுவம் பலமடைகிறது என்கிறார் -ரஞ்சன்

பரந்தனில் விடுதலைப் புலிகள் இராணுவத்தினரை நேருக்கு நேர் எதிர்கொண்டு உக்கிரமாக தாக்குகின்றனர் இதனால் இராணுவத்திற்கு உதவியாக மேலும் ஆயிரம் துருப்புகள் ஆனையிறவில் இறக்கி விடப்பட்டுள்ளனர்- இராணுவத்தினர் புலிகளின் எதிர்ப்பை முறியடித்து கிளிநொச்சியைக் கைப்பற்ற முயற்சி மேற்கொண்டு வருகின்றனர் என பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்தார் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க, அரசு, பாதுகாப்புப்படையில் தமிழ் இளைஞர்களும் சேர்க்கப்படுவர் என அறிவித்ததையடுத்து விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் அவ்வியக்கத்தை விட்டு பெருமளவில் வெளியேறிவிட்டனர், இதனால் புலிகளின் ஆட்பலம் குறைந்துவிட்டது என்று மேற்படி மாநாட்டில் — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-00

முரசொலி

முரசு 04 ஒலி 164 வெள்ளி 27-07-1990 (ஆடி 11) முஹர்ரம் 04

# ஜே. வி. பி, தென்பகுதியில் மீண்டும் கிளர்ச்சி முஸ்தீபு

## தமிழ்ப் பகுதியில் ர்ாணுவ குவிப்பை தனக்கு சாதகமாக்குகிறதா?

**வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அரசு, விடுதலைப் புலிகளின் எழுச்சி முயற்சியை முறியடிக்க முழுமுனைப்புடன் தன் படைபலத்தைப் பிரயோகிப்பதாக அறிவிக்கப்படும் இவ்வேளையில் தென்னிலங்கையில் அரசுக்குப் புதுவடிவத்தில் ஜே. வி. பி யினர் மூலம் மீண்டும் நெருக்கடி தோன்றியுள்ளதாக நேற்றிரவு தகவல் வெளியானது**

ஏஜென்ஸிச் செய்திகளை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் வானொலி இதனை அறிவித்தது.

ஜே. வி.பி யினரின் முக்கிய கோட்டையாக முன்னர் ஊவாமாகாணத்தின் திஸ்ஸமகாரகம, வெள்ளவாயா முதலான பகுதிகள் இருந்துவந்தன, 1971-ம் வருடத்தில் இப்பகுதிப் பொலிஸ் நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட திடீர் தாக்குதல்களையடுத்தே தீவிரவாதம் அங்கு வலுத்தது எனச்சுட்டிக்காட்டப்படுகிறது

பின்னர் இவ்வியக்கம் மாத்தறை, காலி பகுதிகளில் தன் செல்வாக்கை வலுப்படுத்தியதாகக் கூறப்பட்டது.

—04ஆம் பக்கம் பார்க்க

## ஹெலி இறங்க விடாமல் பரந்தனில் புலிகள் தாக்குதல்

கிளிநொச்சி முகாம் நோக்கி முன்னேற முனையும் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை நடாத்துவதாகவும் கடந்த செவ்வாய் அன்று இடம்பெற்ற தாக்குதலில் சிங்கன் என்ற போராளி வீரமரணமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் தரப்பில் —04ஆம் பக்கம் பார்க்க

## இதன் விபரீதம் என்னவோ?

## அவ்ரோவிலிருந்து வீசப்பட்ட புதிய இரசாயனக் குண்டு

இயக்கச்சிக்கு அருகில் அவ்ரோவில் இருந்து போடப்பட்ட குண்டொன்று பரிசீலனைக்காக செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. ஒன்றரை அடி நீளமுள்ள பவுடரின்னின் அமைப்பையுடைய இக்குண்டு இரண்டாகப் பிளந்த போது கந்தகத்தின் நெடியுடன் கூடிய இரசாயனப் பொருளொன்றின் — 04ஆம் பக்கம் பார்க்க

## மயிலிட்டிப் பக்கமிருந்தும் வெளியேற முயற்சி

நேற்று பலாலி இராணுவ முகாமில் இருந்து மயிலிட்டிப் பக்கமாக வெளியேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை நடாத்தியதையடுத்து அவர்கள் மீண்டும் முகாமிற்குத் திரும்பிச்சென்றனர்.

இம்மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஹமீத் (சி. இராசலிங்கம் அச்சுவேலி) —04ஆம் பக்கம் பார்க்க

## கிரான் நோக்கிச்செல்கையில்

ஏறாவூரில் இருந்துகிரானை நோக்கி சென்று கொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இத்தாக்குதலின் —04ஆம் பக்கம் பார்க்க

## தென்னிலங்கையிலும்...

தென்னிலங்கையிலும்இனப் பற்றுக் கீதங்கள் பதிவு செய்யப்பட்டு பலபகுதிகளிலும் ஒலிபரப்பப்பட்டு வருவதாக அறிய வந்துள்ளது. நாம் இலங்கையர், நம் இனம் சிங்களம், நாம் எவருக்கும் சளைத்தவர்கள் அல்லர் என்ற வகையில் இவை அமைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் இவற்றைத்தன் அலை வரிசையில்ஒலிபரப்பிவருகிறது

## பரு. கடற்பகுதியிலிருந்து தினசரி பீரங்கித் தாக்குதல்

பருத்தித்துறை கடற்பரப்பில் இருந்து கரையை நோக்கி தினசரி பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன.

கடந்த இரண்டு நாட்களாக சில பீரங்கி வேட்டுக்கள் குடிமனைப் பகுதிகளையும் நோக்கி தீர்க்கப்பட்டதாக அவ்வூர் மக்கள் தெரிவிக்கிறார்கள்.

பெரும்பாலும் இத்தாக்குதல் மக்கள் உறக்கத்தில் இருக்கும வேளைகளில் நடத்தப்படுவதால் அந்த நேரத்தில் என்ன செய்வதென்று அறியாமல் திகைத்துப்போய் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## பூனாவையிலிருந்து ஓட்டமாவடி கிளம்பிய ராணுவம் மீது தாக்குதல்

நேற்று பூனாவையில் இருந்து ஓட்டமாவடிக்கு சென்ற இராணுவத்தினரை வழிமறித்து விடுதலைப் புலிகள்கடும் தாக்குதலை நடாத் —04ஆம் பக்கம் பார்க்க

# காங்கேசன் சூழலில் நேற்றுப் படைகள் உக்கிரத் தாக்குதல்; புலிகளும் பதிலடி

காங்கேசன்துறைப் பகுதியிலும் அதனை சூழவுள்ள கிராமங்களிலும் நேற்றுக் காலை முதல் மிகப் பயங்கரமான தாக்குதல்களை ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

இதன் எதிரொலியாக காங்கேசன்துறைப் பிரதேசத்தில் எஞ்சியிருந்த ஒருசிலரும் கூட தத்தம் வசிப்பிடங்களை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகினர் எனக் கூறப்படுகிறது.

இப் பகுதியில் கடற்படைப் பீரங்கித் தாக்குதல் மிக உக்கிரமாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தின் முன்னேற்றத்தைத் தடுப்பதில் விடுதலைப் புலிகள் மிக வேகப் பதிலடித் தாக்குதலில் ஈடுபட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஸ்ரீ)

# சிறிய செய்திகள்

## தொற்று நீக்கு குழு தயார்

சிறிலங்கா விமானப்படையால் அவ்ரோ விமானங்கள் மூலம் போடப்படும் மலம் கலந்த நீர் வீழ்ந்த இடங்களிற்கு, உடன் சென்று தொற்று நீக்கி கிருமிகளை அழிக்கவென ஒரு படைப் பிரிவு யாழ்மாநகரசபை எல்லைக்குள் எந்நேரமும் தயார் நிலையில் உள்ளது.

இப்படைப் பிரிவு பல கிளைகளாகப் பிரிக்கப் பட்டு யாழ் மாநகரசபை, ஒஸ்மானியாக் கல்லூரி, சென்பற்றிக்ஸ் கல்லூரி, சென்யோன்ஸ் கல்லூரி ஆகிய இடங்களில் இயங்கி வருகிறது. இவ்வாறு மாநகர சுகாதாரப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கி)

## சீனி இல்லை கசிப்பு தாராளம்

(கோப்பாய்)

தற்போது சீனிக்குத் தட்டுப்பாடு நிலவிய போதும் திருநெல்வேலி பாற் பண்ணையை அண்மித்த குடியேற்றத் திட்டப் பகுதியிலும், கோண்டாவில் மேற்குப் பகுதியிலும் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் தாராளமாக நடைபெற்றுவருகின்றது.

கூடுதலாகப் பெண்களே இவ் விற்பனையில் ஈடுபடுவதாக அறிய வருவதுடன் போத்தல் அறுபது ரூபா முதல் எழுபது ரூபா வரை விற்பனை செய்யப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (23-கி)

## கட்டணம் உயருகிறது

பருத்தித்துறை - யாழ்ப்பாண மினிபஸ் கட்டணம் மீண்டும் உயர்ந்துள்ளது.

ரூபா ஐந்தாக இருந்த மேற்படி இடங்களுக்கான கட்டணம் ஆறு ரூபாவாகி பின்னர் பத்து ரூபாவாகவும், அதனைத் தொடர்ந்து பதினைந்து ரூபாவாகவுமிருந்தது. தற்போது ரூபா இருபதாகவும் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. (39கி)

## பெரியபுராண சொற்பொழிவு

நல்லூர் கந்தப் பெருமானின் உற்சவகால 25 நாட்களிலும் நல்லை ஆதீனத்தில் பி.ப 3 மணிக்கு வேதாந்த சாகரம் ஆத்மஜோதி நா.முத்தையா சொற்பொழிவு ஆற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது ஆதீனத்தில் தினமும் 4. 30 மணிக்கு அமைதியும், சுபீட்சவாழ்வும் வேண்டி பஜனைகள் நடைபெறுகின்றன.

## தொடரும் கொள்ளைகள்

புலோலி சந்தியிலுள்ள நாவலர் புத்தக நிலையம் இரவு வேளையில் உடைக்கப்பட்டு 6,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக நிலைய உரிமையாளர் புகார் செய்துள்ளார்.

இப் பகுதியில் தொடர்ந்தும் கொள்ளைகள் இடம் பெற்று வருவதனால் இப் பகுதி மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர். புலோலிப் பகுதியில் இரண்டு வீடுகளில் அண்மையில் பகல் வேளைகளில் கொள்ளை முயற்சிகள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15 கி)

## பாண்பெற நீண்ட கியூ

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சம்மேளனத்திற்கு அண்மையில் கிடைக்கப்பெற்ற மாவு, பாவனையாளர்களுக்கு பங்கிடப் போதுமானதாய் இல்லாதிருந்ததினால், சம்மேளனம் எடுத்த தீர்மானத்திற்கிணங்க, கொழும்புத்துறையில் உள்ள பேக்கரி ஒன்றிற்கும், முஸ்லிம் வட்டாரத்தில் உள்ள பேக்கரி ஒன்றிற்குமாக இரண்டு பேக்கரிகளுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறையில் உள்ள பேக்கரியில் உற்பத்தி செய்யப்படும் பாண், முதலில் வந்தவர்கட்கு முதல் என்ற அடிப்படையில் வரிசையில் நிற்கும் 300 அல்லது 350 பேருக்கும், பெரியவர்கட்கு 2றாத்தல், சிறுவர்கட்கு ஒரு றாத்தல் என்ற வீதத்தில் விற்பனை செய்யப்படுகிறது. (16 கி)

## மன்னாரில் ரயில்பாலம் தகர்ப்பு

மன்னாரில் புகையிரதப் பாலமொன்று தகர்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் தீவைப் பிரதான நிலப் பரப்புடன் இணைக்கும ரயில்பாலமே தகர்க்கப்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. (கி)

## இடம் பெயர்ந்தோருக்கு சம்பள முற்பணம்

வடக்கு, கிழக்குப் பகுதியில் கடமை புரியும் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் அவர்கள் இடம் பெயர்ந்துள்ள இடங்களில் சம்பளமுற்பணத்தை வழங்குமாறு உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

யூன் மாதச்சம்பள முற்பணமாக இது கருதப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## சுவாமிகள் நினைவாக...

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து அன்னதானத்தொண்டாற்றி இறையடியெய்திய சுவாமி மயில்வாகனம் அவர்களின் 5-ம் வருட குருபூசை செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தில் 28-ம் திகதிநடைபெறவுள்ளது. (15கி)

## ஊரடங்கு தொடர்கிறது

கிளிநொச்சி நிருவாக மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை காலை அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் உள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. ஊரடங்குச் சட்டம் எப்போது நீக்கப்படும் என்பதுபற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை. (கி)

## மன்னாரில்

மன்னார் மாவட்டத்தில் பணிபுரிந்த டாக்டர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளதால் மன்னார்ப்பகுதியின் கிராமப் புறமக்கள் மருத்துவ சேவையின்றி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (03கி)

நிலாவெளி பாதை இராணுவத்தால் மூடப்பட்டது

# திருகோணமலைத் தமிழர் வடபகுதிக்கு வரத் தடை

திருகோணமலையில் நிலாவெளி பகுதியினூடான சகல போக்குவரத்தையும் இராணுவத்தினர் தடைசெய்துள்ளனர்.

நிலாவெளிப் பகுதிக்கு செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் வருவதற்குக்கூட தடைவிதிக்கப்பட்டுள்ளது. எவரும் அப்பகுதி வழியாக கால்நடையாகத்தன்னும் செல்லக்கூடாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது திருமலையிலிருந்து வடபகுதிக்கு தப்பி வருவோரில் பெரும்பாலானோர் நிலாவெளி வந்து அதனூடாகவே முல்லைத்தீவை அடைகின்றனர்.

திருமலையிலிருந்து வடபகுதிக்கு தமிழ் மக்கள் தப்பிச் செல்வதைத் தடுக்கும் வகையிலேயே இராணுவத்தினர் இப்புதிய கட்டுப்பாட்டை விதித்துள்ளனர்.

இதேவேளை நிலாவெளி இராணுவத்தினர் செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளை அழைத்து நிலாவெளி வழியாக எந்தப் போக்குவரத்தையும் வைக்கக்கூடாதெனவும், பொருட்களை இவ்வழியாக எங்கும் எடுத்துச் செல்லக்கூடாதெனவும் பணித்துள்ளனர்.

இதனால் திருமலையில் சிக்கியுள்ள தமிழ் மக்கள் வடபகுதிக்கு தப்பி வருவதில் பெரும் தடை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கி)

# 8 சிங்களக் குடியேற்றவாசிகள் பொலநறுவையில் சுட்டுக் கொலை

பொலநறுவை மாவட்டத்திலுள்ள அரவங்கல கிராமத்தில் எட்டுப்பேர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட எட்டுப் பேரும் சிங்கள குடியேற்றவாசிகளாவர். இவர்களில் ஐவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், இருவர் பெண்கள்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவத்திற்கு விடுதலைப் புலிகளே காரணம் என அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது. (கி)

## மண்டலாபிஷேகம்

புராணச் சிறப்புமிக்க ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும், 1008 சங்காபிஷேகமும் இன்று 27-ம் திகதி நடைபெறவுள்ளது. (36கி)

இன்றைய நிலையில்
உங்கள் தேவையை
பூர்த்தி செய்ய
பொபி சோடா
பொபி நெல்லிரசம்
பொபி
இன்டஸ்றீஸ்
கண்டி வீதி
கைதடி, நுணாவில்
07042

செஞ்சிலுவைச் சங்கம் மூலம்

# கொழும்புசெல்ல 63 பேர் பதிவு; ஆனால் 20 பேருக்கே கப்பலில்இடம்

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் கொழும்பிற்குச் செல்ல பதிவுசெய்தவர்களில் இருபது பேர் மட்டுமே கப்பலில் அனுப்பி வைக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் சிக்கியுள்ள வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை வைத்திருப்போரை கொழும்பிற்கு அழைத்துச் செல்லும் திட்டத்தின்கீழ் 63 பேர் கொழும்பு செல்ல தமது பெயர்களை யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தில் பதிவு செய்திருந்தனர்.

இவர்களில் 41 பேர் அடுத்த சில தினங்களில் இங்கு வரவுள்ள கப்பலில் கொழும்பு செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர். ஆனால் கப்பலின் இடவசதியைப் பொறுத்து 20 பேரை மட்டுமே அழைத்துச் செல்ல முடியும் என தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் கப்பலில் திருமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து வாகனங்களில் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படுவர். (66 கி)

மருந்துக் கடை இடமாற்ற அறிவித்தல்
ஆ. இராசையா அன் சன்ஸ்
தற்போதைய சூழ்நிலை காரண்மாக 69, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் கீழ்க்காணும் முகவரிகளில் இயங்குகின்றன என்பதை அறியத்தருகிறோம்.
★ 90, சட்டநாதர் கோயில் வீதி, நல்லூர்
★ 52, பலாலி வீதி, திருநெல்வேலி.
(திருநெல்வேலி சந்தைக்கு அருகில்)
07050

OFFICE EQUIPMENT LTD
தற்காலிக இடமாற்றம்
எமது ஸ்தாபனத்துடன் பின்வரும் இடங்களில் தொடர்பு கொள்ளலாம்
1. நம். 537, சிவன் கோவில் வீதி
( CENTRAL NURSING HOME முன்பாக )
திருநெல்வேலி தெற்கு
2. உருக்குத் தளபாட உற்பத்தித் தொழிற்சாலை
வேம்பன் வீதி, (பெற்றோல் செட் முன்பாக)
உரும்பிராய்.
அலுவலக நேரம்:- காலை 8-30 மணி தொடக்கம்
பி. ப. 1-00 மணி வரை
07035

கண்டுபிடிக்க செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரிக்கை

# திருமலையில் காணாமற் போன 3000 பேர் பற்றி தகவலில்லை

கடந்த ஒன்றரை மாத காலத்தில் மட்டும் திருமலைப் பகுதியில் மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் காணாமல் போயிருப்பது, யாழ். செயலக காணாமற்போனோர் பட்டியலில் இருந்து தெரிய வந்துள்ளது.

காணாமற் போனவர்கள் பற்றிய முறையீடுகள் தினசரி முப்பது தொடக்கம் ஐம்பதுவரை யாழ். செயலகத்திற்குவந்தவண்ணம் உள்ளன.

குடும்ப அங்கத்தவர்களைப் பிரிந்தவர்கள், இழந்தவர்கள் என்று கூடுதலாக திருமலையைச் சேர்ந்தவர்களின் முறையீடுகளே தமக்குக் கிடைத்து வருவதாக செயலக அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.

கடந்த ஒரு மாதத்தில் கட்டம் கட்டமாக பல தடவைகளில் திருமலையிலிருந்து இடம்பெயர்ந்து யாழ். வந்தவர்கள் தெரிவிக்கும் தகவல்களைப் பார்க்கும்போது பெருந்தொகையானோர் யாழ். மாவட்டத்திலோ அல்லது திருமலை மாவட்டத்திலோ இல்லாத நிலை தெளிவாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுக்கு என்ன நடந்தது எங்கு சென்றார்கள் என்பதை அறிவதில் அவர்கள் குடும்பத்தினர் ஆவலாக இருக்கின்றார்கள்.

இதுவரை மூவாயிரத்துக்கும் அதிகமான முறையீடுகள் யாழ். செயலகத்திற்கு கிடைத்துள்ளன. இவையாவும் உடனுக்குடன் செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு வேண்டிய நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (66-கி)

## உங்களுடையதா?

வவுனியா- வேப்பங்குளத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை ராஜேஸ்வரி, கோப்பாய்தெற்கு தாமோதரம்பிள்ளை வாசுகி, தருமபுரம் நாகமுத்து இராசரட்னம் காங்கேசன்துறை மகேஸ்வரி கந்தையா, உடுவில் பத்மநாதன் ராஜ்நாதன், ஹெந்தளை வேலாயுதபிள்ளை சிவரட்ணம் ஆகியோரது தேசிய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு முரசொலி அலுவலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் ஆசிரியபீடத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## லண்டனில் அறிவிப்பு: 'கிளி, பரந்தன் பகுதிகள் தொடர்ந்தும் புலிகள் வசமே'

கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளை ஸ்ரீலங்கா படையினர் கைப்பற்றியுள்ளதாக வெளிவந்த செய்திகளை விடுதலைப் புலிகள் லண்டனில் மறுத்துள்ளதாக ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி பரந்தன் பகுதிகள் தொடர்ந்தும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளதாக விடுதலைப்புலி பிரதிநிதி ஒருவர் லண்டனில் இருந்து தொலைபேசியில் தெரிவித்ததாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பகுதியை கைப்பற்றும் முகமாக அரசபடைகள் கடுமையான வான்தாக்குதல் மேற்கொண்டுவருகின்ற போதிலும், விடுதலைப்புலி போராளிகள் அதனைச் சமாளித்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## புலிகளின் வற்புறுத்தலினாலேயே ஈரோஸ் பதவி துறந்ததாம்

விடுதலைப் புலிகளின் வற்புறுத்தலினாலேயே நாம் எமது பாராளுமன்றப் பதவிகளைத் துறந்தோம்'

இப்படி ஈரோஸ் உறுப்பினர்கள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினவிடம் தெரிவித்ததாகக் கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாராளுமன்ற ஆசனங்களைத் தாம் கைவிடவில்லை எனவும் பின்னர் பாராளுமன்றத்திற்கு வருவோம் என இவர்கள் அமைச்சரிடம் தெரிவித்ததாகவும் இப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (கி)

## கொழும்பிலிருந்து 60 பேர் நேற்று யாழ்நகர் வந்தனர்

கொழும்பிலிருந்து கடந்த புதன்கிழமை புறப்பட்ட சுமார் 60 பேர் நேற்றுக் காலை யாழ். நகரை வந்தடைந்தனர்.

மதவாச்சி வரை புகையிரதத்தில் வந்த இவர்கள், மதவாச்சியிலிருந்து - வவுனியாவுக்கு இராணுவ பாதுகாப்புடன் பஸ்களில் அழைத்து வரப்பட்டனர்.

இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்தில் பங்குக் குருவிடம் ஒப்படைக்கப்பட்ட இவர்கள் பின்னர் லொறியொன்றில் ஒருவருக்கு 300 ரூபாவீதம் செலுத்தி யாழ். நகர் வந்தடைந்தனர். (9கி)

## பனையைத் தறியாதீர்கள்! புலிகள் வேண்டுகோள்

பொது இடங்களிலுள்ள பனை மரங்களை தறித்து எமது சூழலின் சம நிலை பாதிப்புறச் செய்ய வேண்டாமென விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வடமராட்சி செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பதுங்கு குழிகள் அமைத்தல் என்ற போர்வையில் பொது இடங்களிலுள்ள பனைமரங்கள் தற்பொழுது பெருந்தொகையாகத் தறிக்கப்பட்டு வருவதனாலே இந்தவேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

இவ்வேண்டுதலை உதாசீனம் செய்யாது அனைவரையும் ஏற்று நடக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது(44-கி)

## கொக்காவில் களப்பலி



கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதலில் களப்பலியான இரண்டாவது லெப். சாளினி வல்வெட்டித்துறை புதிய சந்தைப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

அருமைச்சந்திரன் நவலீலவதனா என்னும் இயற்பெயரைக் கொண்ட சாளினி 17.07.1972 ஆம் ஆண்டு பிறந்தவர். பெண்கள் படைப் பிரிவின் நான்காவது பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றவர்.

## வவுனியாவில்

பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின இன்று வவுனியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். இவருடன் ஜனாதிபதியின் பாரியார் ஹேமாபிரேமதாஸா, கல்வி ராஜாங்க அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரன் ஆகியோரும் இன்று வவுனியா வரவுள்ளனர். (கி)


நல்லூர்க் கந்தசுவாமி மஹோற்சவம்

இன்று காலை 10மணிக்கு கொடியேற்றம்
மாலை 4மணிக்கு வசந்த மண்டப பூசை

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.


# பௌத்த சிங்கள இனவெறி, தீவிரவாதம்


பேராசிரியர் பீற்றர் சல்க்
மதங்களின் வரலாற்றுத்துறைத் தலைவர்
உப்சலா பல்கலைக்கழகம், சுவீடன்


இத்தீர்மானம் மிகச் சுலபமாக சர்வதேச பௌத்த இயக்கங்களின் ஆதரவைப்பெற்று நிறைவேறியதை இங்கு குறிப்பிட வேண்டும். தற்போது தீவிரநோக்குக் கொண்டுஇயங்கும் அமைப்புகள் அனைத்துமே 1979க்குப் பிறகே அமைக்கப்பட்டவை. அவையாவன;

1. ஸ்ரீலங்கா பௌத்த சமய நியோஜித சபாவ.
2. சமஸ்த லங்கா சிங்கள பௌத்த சம்விதானய.
3. சிங்கள பல மண்டலய.
4. ஜாதிக பெரமுன.
5. மானவ இதவாதி பிக்கு சம்விதானய.
6. மவபீம சுரகீம வியாபாரய.
   (தாய்நாட்டுப் பாதுகாப்புப் படை)

இன்னும்பல அமைப்புகள் இருப்பினும், இவையே பிரதானமானவை.

இவ்வனைத்து அமைப்புகளுமே இனப்பிரச்சினையையும் தமிழர் உரிமைகளையும் அடிப்படையாக வைத்தே கட்டப்பட்டுள்ளன.

இவற்றில் சிறிலங்கா பௌத்த சமய நியோஜித சபாவ அமைப்பு பௌத்த சமயம் பற்றிய அனைத்து விவாதங்களை மட்டுமே நடத்தி வருகின்றது எனினும் நாட்டின் இனப்பிரச்சினையே இது விவாதித்து வரும் முக்கிய பிரச்சனை ஆகும்.

சம்விதானய மற்றும் தா.பா.ப. அமைப்புகள் ஒரே காலத்தில் துவங்கப் பெற்றவை. சம்விதானய அரசே கட்டியெழுப்பிய அமைப்பு: தா.பா.ப. அமைப்பு பூர்ஷ்வா எதிர்க் கட்சிகள் கட்டி அமைத்ததாகும்.

ஜாதிக பெரமுன என்ற அமைப்பு அனைத்துப் பௌத்தத் தீவிரவாத அமைப்புகளையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வர முற்படுகிறது.

ஜனதா விமுக்தி பெரமுனவுடன் தொடர்புள்ள மாணவ இதவாதி பிக்கு சம்விதானய அமைப்பானது, பௌத்த பிக்குகளைத் தீவிரவாதிகளாக மாற்றுவதற்காக, ஜே.வி.பி. இயக்கத்தின் பிரசாரத்தை நேரடியாக மேற்கொள்கிறது தா.பா.ப. அமைப்பும் பல அமைப்புகளை ஒரே அணியில் கொண்டுவந்து தமிழர் எதிர்ப்பு அணியைக் கட்ட முற்பட்டுள்ளது.

நாம் இங்கு தா.பா.ப. அமைப்பை மட்டும் கடும். ஆய்வுக்கு உட்படுத்த விழைகிறோம். இதன் மூலம் மதச் சார்பற்றதைப் போல் இயங்கி வரும் சிங்கள அரசியல் கட்சிகளை பௌத்த குருமார்கள் எவ்வாறு ஆட்டிப்படைக்கிறார்கள் என்பதை அறிய முடியும்.

இவ்வாறாக ஆட்டிப்படைக்கப்பட்ட சிங்கள மக்களே' மாகாணசபைத் தீர்வைக் கூட எதிர்ப்பதில் மும்முரம் காட்டுகிறார்கள். இலங்கையின் ''ஒற்றுமை'' மற்றும் ''இறையாண்மை'' ஆகியவற்றைக் காப்பாற்றுவதற்காகத் தான் இத் தீர்வையும் எதிர்த்திட வேண்டும் என்று அவர்களுக்குப் போதிக்கப்பட்டதன் பலனே இது!

## தாய் நாட்டுப் பாதுகாப்புப் படை.

1986 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கை அரசு மாகாணசபைத் தீர்வை முன்வைத்த சமயத்தில் நான் இவ்வமைப்பைப் பற்றிய ஆய்வைச் செய்தேன். இவ்வமைப்பின் தலைவர்கள் எழுதிய மூன்று அறிக்கைப் பிரசுரங்களையும் அவர்களுடன் நடத்திய மூன்று நேர்காணல்களையும் இதில் பயன்படுத்தியுள்ளேன். இவையே இவ்வமைப்பைப் புரிந்து கொள்ளப் போதும் என்றாகி விடாது. இவ்வமைப்பானது பரந்துபட்ட மக்களைத் தன்னளவில் ஈர்த்து வருகின்றது என்பதையும், இதன் கோஷங்கள் எளிமையாகவும் வெகு விரைவில் விலைபோகக் கூடியவையாக இருப்பதையும் நாம் காணவேண்டும்.

1986 ஆகஸ்டு—செப்டம்பர் மாதங்களில் தினசரி ஒரு கூட்டம் என்றளவில் 16 பெரும் பொதுக்கூட்டங்கள் இவ்வியக்கத்தாரால் நடத்தப்பெற்றன. இவை நடந்த இடங்கள் நுகேகுட, வட்டுவ, அம்பாந்தோட்டை, எம்பிலிப்பிட்டிய, வெல்லாவய, பதுளை, ஓரணை, மாத்தளை, நாத்தாண்டிய, குருநாகல், கொழும்பு, துவலப்பிட்டிய, உரகக, காலி, தங்காலை மற்றும் கண்டி.

நவம்பர் மாதத்துக்குள் 30 பொதுக்கூட்டங்கள் நடத்தப்பெற்று விட்டன. இக் கூட்டங்களே தா.பா.ப. அமைப்பின் போர்க்குணங்களை வளர்தெடுக்கப் பயன்படுகின்றன. பெரும் விளம்பரங்களுடன் இக் கூட்டங்கள் விளங்குகின்றன. இவ்வியக்கத்தின் குறிக்கோள்களை வெளிப்படுத்தும் அறிக்கைகளைக் கவனிப்போம்.

இலங்கை அரசு இனப்பிரச்சினையை ஒட்டி நடத்தி வந்த கொழும்பு அனைத்துக் கட்சி மாநாடு (டிசம்பர் 1984) போராளிக் குழுக்களுடன் நடத்திய திம்பு பேச்சுவார்த்தைகள் (ஜூன்- ஆகஸ்டு 1985) மீண்டும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியுடன் (TULF) நடத்திய கொழும்புப் பேச்சுவார்த்தைகள் (மே- டிசம்பர் 1986) ஆகியவற்றை அடுத்து மாகாணசபைத் தீர்வை தானாகவே அமுல்படுத்த தீர்மானித்தது. (தொடரும்)

## [illegible]வர்ல அறுவர் கைது மூவர் கோண்டாவில் வாசிகள்

யாழ். நகரிலிருந்து கடந்த மாதம் 18-ம் திகதி பேராதனைப் பல்கலைக்கழகம்சென்ற அறுபதுபேர் கொண்ட பொறியியல் துறை மாணவர்களில் அறுவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள் எனத் தெரிய வந்துள்ளது.

இந்த அறுவரது நிலையும் யாரும் அறிய முடியாததாக உள்ளது என்றும் இவர்களில் மூவர் கோண்டாவில் பகுதியைப்பிறப்பிடமாகக்கொண்டவர்களாவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறு இருக்க, மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திலிருந்து யாழ். நோக்கி வந்ததாகக் கூறப்பட்ட ஐம்பது மட்டு நகர் பல்கலைக்கழக மாணவர்களும் அங்கேயே பாதுகாப்பாக இருக்கின்றார்கள் எனவும் நேற்று மட்டக்களப்பிலிருந்து யாழ். வந்து சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவர் தெரிவித்தார். (64- ஸ்ரீ)

## ஆசிரியர் அவஸ்தை வேதனம் கிடைக்கவில்லை

யாழ். மாவட்ட ஆசிரியர்களின் கடந்த இரண்டு மாத காலச் சம்பளத்தை வழங்குவதற்கு இதுவரை கொழும்பில் இருந்து எந்தப்பணக் கொடுப்பனவுக் கட்டளையும் வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒரு மாதகாலமாக நாளொன்றுக்கு பலதடவைகள் கொழும்புடன் தொடர்பு கொள்ள கல்விக்கந்தோரில் இருந்துயாழ்வங்கிக்குச்சென்று வந்தும் இதுவரையும் ஒரு பலனும் கிடைக்கவில்லை என்றும் தற்போதைய சூழ்நிலையில் எமது ஆசிரியர்கள் படும் கஷடத்தைப் போக்க முடியாமல் இருப்பதாகவும் யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் கவலை தெரிவிக்கிறார். (66-ஸ்ரீ,

## மட்டுநகர் வாலிபர் மிரட்சி பெருமளவு இடம் பெயர்வு

மட்டக்களப்பிலிருந்து இராணுவக் கெடுபிடிகளால் இளைஞர்கள் பெருமளவில் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்த வண்ணம் உள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு நேற்றைய தினம் யாழ். வந்துசேர்ந்த மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவர் முரசொலிக்குத் தெரிவித்தார்.

இராணுவத்தினர் இளைஞர்களை பெருமளவில் கைது செய்து வருவதன் காரணத்தாலேயே இவர்கள் இவ்வாறு இடம் பெயர்ந்து வருகின்றார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார். (64-ஸ்ரீ)

## "வயல் வெளிகளிலும் விழிப்புநிலை தேவை"

தென்மராட்சிப் பகுதியில் உள்ள வயல் வெளிகள் கொண்ட பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக ஒவ்வொருநாளும் பத்துப் பேர் கொண்டு இயங்கக் கூடியதாக விழிப்புக் குழுக்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்

இவ்வாறு வரணி வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற சிற்றூரவையினருக்கான கருத்தரங்கில் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா தெரிவித்தார்.

திரு. பாப்பா தொடர்ந்து பேசுகையில் ''தற்காப்புப் படைப்பிரிவில் பயிற்சி பெற 25 வயதிற்கு மேற்பட்டோர் உடனடியாக வரவேண்டும். இன்றைய நிலையில் நாமனைவரும் போராட்டத்தில் ஈடுபட்டு எமது தமிழீழ இலட்சியத்தை வென்றெடுக்க முழுமையாக பங்களிப்பு செய்யுங்கள்'' என கேட்டுக் கொண்டார். (ப-5-ஸ்ரீ)

## மாட்டுவண்டிகள் மூலமும்...

கிளிநொச்சிப் பகுதிகளில் உள்ள மக்கள் பலர் மாட்டு வண்டிகளின் உதவியுடன் இரவோடு இரவாக யாழ். மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்து வருகின்றார்கள்

கடந்த ஞாயிறு அம்புலன்ஸ் வண்டி ஒன்றை துரத்தி உருத்திரபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பொம்மர் தாக்குதலையடுத்து அப்பகுதி மக்கள் பதுங்குகுழி அமைப்பதில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளார்கள். (03-ஸ்ரீ)

### அவ்ரோவிலிருந்து...

நெடி வெளிப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இக்குண்டின்இரசாயனப் பதார்த்தத்துடன் கூடிய எஞ்சிய பகுதியே தற்பொழுது செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் மாதிரிகள் இரசாயனப் பரிசோதனைக்காக தற்பொழுது அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத். தெரிவிக்கப்பட்டது.

சமீபகாலத்தில் போடப்பட்ட இரசாயனக் குண்டுகளின் அமைப்பு, செயற்பாடு என்பவற்றிலிருந்து இக்குண்டு வித்தியாசமானதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (கி-ஸ்ரீ)

### பரு கடற்...

இந்தப் பீரங்கித் தாக்குதல்களால் சில வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும் ஆனால் இதனால் காயமடைந்தவர்களைப் பற்றிய விபரங்களை அறியமுடியாமல் இருக்கின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (66-ஸ்ரீ)

### கிரான்..

போது இராணுவத்தினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டபோதும் விடுதலைப் புலிகள் தரப்பில் எவருக்கும் காயமேற்படவில்லையென விடுதலைப் புலிகளின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. (03 ஸ்ரீ)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிறெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சு வீதி, 'லக்ஷ்மி பில்டிங்கில் உள்ள அச்சகத்தில் 27-7-90 அச்சிட்டு வெளியிடப்பெற்றது,

### திருகோணம[illegible]ப் பகுதி

## காடுகளில் துண்டுப் பிரசுரங்கள் மக்களை மீளக்குடியமர அரசு அறிவிப்பு

திருகோணமலையில் நிகழ்ந்த கடும் மோதல்களின் பின்னர் மக்களின் சகஜ வாழ்க்கை கருதி புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அரசு நேற்றுத் தெரிவித்தது.

அச்சத்தால் வீடுகளை விட்டு வெளியேறிய மக்களை மீண்டும் தத்தம் இடங்களில் குடியேறுமாறு காட்டுப்பகுதிகளில் படையினர் துண்டுப் பிரசுரங்களை வீசியுள்ளதாகவும் அரசு தெரிவித்தது.

இதேவேளைஇங்கு நிகழ்ந்த உக்கிர மோதல்களையடுத்து நகரம் முற்றாக ஸ்தம்பிதமடைந்தது, வெறிச்சோடி[illegible] காணப்படுவதாக ஏஜென்ஸி[illegible] செய்திகள் தெரிவிக்கின்றன[illegible] (ஸ்ரீ,

## கிளி- பரந்தன் பகுதி கட்டிடங்கள் பலத்தசேதம்

கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் தொடர்ந்து இடம் பெற்று வரும் பொம்மர், அவ்ரோ தாக்குதல்களினால் பரந்தன் சந்திக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் உள்ள பலமாடிக்கட்டிடங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விமானங்கள் கட்டிடங்களை தரைமட்டமாக்கும் முயற்சியிலே கூடுதலாக ஈடுபட்டுவருகின்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஈஸ்வரன்படமாளிகை, ஏ. கே. ஆர் கட்டிடம் மற்றும் பலமாடிக்கட்டிடங்கள் இத்தாக்குதல்களினால் சேதமடைந்துள்ளதாக அங்கிருந்து வருபவர்கள் தெரிவிக்கின்றனர். (03 ஸ்ரீ)

### நல்லூர் உற்சவம்

## மாநகரசபை சேவைகள் வழமை

இன்று ஆரம்பமாகும் நல்லூர் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபையினர் தமது வழமையான சேவைகளான கோவில் சுற்று வீதிகளுக்குத் தண்ணீர் தெளித்தல், சுகாதார நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல், வீதித்தடைகளை மேற்பார்வை செய்தல் போன்றவற்றை இம்முறையும் எவ்வித மாற்றமுமின்றி ஒழுங்கு செய்யவுள்ளனர்.

கோவில் வீதி, செட்டித் தெரு, பருத்தித்துறை வீதி என்பவற்றிலுள்ளவீதித்தடைகள் இம் முறையும் வழமை போல் அதிகாலை 5 மணி முதல் மாலை 7மணிவரை நடைமுறையிலிருக்கும்.

வீதித்தடை நடைமுறையிலுள்ள இடங்களுக்கு உட்பாகத்தினுள் ஏற்கனவே நிரந்தரமாகவுள்ள கடைகளை தவிர மேலதிகமாக ஐஸ்கிறீம் சாலை, மளிகைகடைபோன்ற சிறு கடைகள் கூட இம்முறை அனுமதிக்கப்படவில்லை. (9-ஸ்ரீ)

## நேற்றுப் பகலும்......

நேற்றுப்பகல் 11 மணியளவில் யாழ். கோட்டைப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் காவல் அரண்களை நோக்கி இரு பொம்மர்கள் குண்டுவீச்சுத் தாக்குதலை நடாத்தின.

இத்தாக்குதலின் போது கட்டடங்களுக்கு மட்டுமே சேதம் ஏற்பட்டது. இதையடுத்து நகரப் பகுதிகளில் திறந்திருந்த கடைகள் யாவும் மூடப்பட்டன. 03ஸ்ரீ)

### போதனா வைத்தியசாலை

## டாக்டர்கள் பலர் கடமைக்கு வரவில்லை

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமை புரிந்த டாக்டர்கள் பலர் இன்னமும் கடமைக்கு திரும்பவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

மானிப்பாயில் இயங்கும் போதனா வைத்தியசாலையில் எண்ணிக்கையில்குறைந்த நோயாளிகள் உள்ளகாரணத்தினால் டாக்டர்களை தத்தமது பகுதிகளில் உள்ள வைத்திய சாலைகளில் கடமை புரியும்படி அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இன்னமும் பல டாக்டர்கள் தமது பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையேற்க வில்லையாம்.

கிராமப்புறவைத்தியசாலைகளில் உதவி வைத்திய அதிகாரிகளும். வைத்திய அதிகாரிகளும் பொறுப்பாக உள்ளதனாலே இவர்கள் கடமைக்கு செல்லவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (03 ஸ்ரீ,

## 10 கிராமவாசிகள் மதவாச்சியில் கொலையாம்

நேற்றுக்காலை மதவாச்சிப் பகுதியில் சேனைப் பயிர்ச் செய்கை மேற்கொண்டுவரும் பத்து சிங்கள கிராமவாசிகளை விடுதலைப்புலிகள் சுட்டுக்கொன்றுவிட்டதாக அமைச்சர்ரஞ்சன் விஜேரட்ன நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

### ஒட்டமாவடி...

தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலில் இராணுவத்தின் தரப்பில் ஓர் உயரதிகாரி கொல்லப்பட்டார் பன்னிரண்டு படையினர் படுகாயமடைந்தனர் என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (ஸ்ரீ)

### ஜே. வி. பி...

இப்போதும் மாத்தறையிலிருந்தே அரசுக்கு எதிரான புதுக்கிளர்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இங்கு ரி-56 ரக துப்பாக்கிகளுடன் வந்த ஜே.வி.பியினர் கிராமிய சமாதானக்குழுவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படும் 13 உறுப்பினர்களையும் மேலும் இவர்களுடன் இணைந்த இருவரையும் அருகிலுள்ள காட்டுப் பகுதிக்குள் கடத்திச் சென்று சுட்டுக்கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தம்இயக்கம் பற்றி பொலிஸாருக்குத் தகவல் கொடுத்ததே இவ் வஞ்சம் தீர்ப்புக்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்ப்பகுதிகளில் இராணுவத்தை அரசு குவித்து வரும் இவ்வேளையைச் தமக்குச் சாதகமாக்க ஜே. வி. பி. முனைந்துள்ளது என்பதனை இது காட்டுகிறது என்றும் மேலும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ)

## ஜனாதிபதி - ஆறு தமிழ்க்குழுக்கள் மீண்டும் கலந்தாலோசனை

ஆறு தமிழ்க்குழுக்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாஸவைக்கொழும்பில் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

இலங்கையின் ஒற்றுமைக்கு ஊறு விளையாதவகையில் தமிழர் பிரச்சினைக்கு எவ்விதத்தில் தீர்வு காண்பது என்பது பற்றி இவ்வேளை கலந்தாலோசிக்கப் பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த இருவாரகாலத்தில் இவர்கள் மூன்றாவது தடவையாக ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

புளொட், ஈ. பி. ஆர். எல். எப், டெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. டி. பி, ஈ. என். டி. எல். எப். ஆகிய ஆறு தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளே நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடியுள்ளவர்கள் ஆவர் (ஸ்ரீ)

### மயிலிட்டிப்...

வீரமரணமடைந்தார்.

இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (03ஸ்ரீ)

### ஹெலி ..

தெரிவிக்கப்பட்டது.

பரந்தன் பகுதியில் ஹெலியை இறங்கவிடாமல்விடுதலை புலிகள் தாக்குதல் நடாத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பரந்தனின் தெற்குப் பகுதியில் இலங்கை இராணுவத்தினர் விடுதலைப் புலிகளுடன் பெரும் மோதலில் ஈடுபட்டுள்ளதாகவும் இத்தாக்குதலுக்கு மேலும் படைபிரிவுகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டரங்கள் தெரிவிக்கின்றன.(03 ஸ்ரீ)

## தற்காலிக நிறுத்தம்

யாழ். ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக்கிளையும் ஸ்ரான்லிவீதி இலங்கை வங்கிக் கிளையும் நேற்றுடன் தற்காலிகமாக மூடப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ)

### புலிகளின்...

தெரிவித்துள்ளார். யாழ். குடாநாட்டு பகுதியில் ஆஸ்பத்திரிகள் உள்ள சுற்றாடல் அமைதி வலயமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது இது தீவிரவாதிகளுக்கே சாதகமாக அமைந்துவிடும் என பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேயரட்ன குறிப்பிட்டார். (து-ஸ்ரீ)